**குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கு இணையத்தளத்தின் ஊடாக**

**விண்ணப்பத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்**

விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலையும் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பத்தினை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்களையும் நன்றாக வாசிக்கவும்.

விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளைத் தொடங்கும் போது விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் விபரங்கள்:

***சகல விண்ணப்பதாரிகளிடமும் பின்வரும் ஆவணங்கள் / விபரங்கள் இருத்தல் வேண்டும்:***

***தேசிய அடையாள அட்டை***
***உயரம் (செ.மீ) குறிப்பிடப்படல் வேண்டும்***
***தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்***
***கட்டணம் செலுத்தியதற்காக வங்கியினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு***

1. கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை உள்ளிடல் வேண்டும். விண்ணப்பதாரியின் தாய் அல்லது தகப்பனின் அல்லது நெருங்கிய ஒருவரின் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட முடியும்.
2. கட்டணம் செலுத்தியதற்காக வங்கியினால் *வழங்கப்பட்ட* பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூபா 300/-இனை இலங்கை வங்கி, தெப்ரபேன் கிளை, கணக்கு இலக்கம் 7041318 , 'சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்' எனும் கணக்கிற்குப் பணம் வரவு வைத்துப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் அச்சு இலக்கத்தினை (000/PF000000/00/000) விண்ணப்பத்தின் உரிய இடத்தில் உள்ளிடவும்.

**விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் படிமுறைகள்:**

இணைத்தளத்தின் ஊடாக விண்ணப்பித்தல் ⟶ விண்ணப்பத்தைப் பதிவேற்றம் செய்த பின்னர் கிடைக்கும் ஐந்து (5) இலக்கங்களைக் கொண்ட தொடரிலக்கக் குறியீட்டினைப் (நிரப்பிய விண்ணப்பத்தின் அச்சிட்ட பிரதியொன்றைப் பின்னர் பெற்றுக்கொள்ள இது அவசியமாகும்) பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்.

***கவனிக்க:*** ***இணைய இணைப்பில் தடங்கல் ஏற்பட்ட காரணத்தால் அல்லது வேறு காரணங்களினால் விண்ணப்பிக்கும் செயற்பாடுகளை நிறைவு செய்ய முடியவில்லையென்றால், நீங்கள் திரும்பவும் புதிதாக விண்ணப்பத்தினை முதலில் இருந்து நிரப்புதல் வேண்டும்.***

1. முழுமையான விண்ணப்பம் இணையத்தளத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதன் அச்சுப் பிரதியொன்றை உங்கள் வசம் வைத்திருக்கவும்.

2. இம்முறை சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு விண்ணப்பத்தைத் தபாலில் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதால் அவ்வாறு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளவும்.

**இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் :**

1. நீங்கள் விண்ணப்பத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே நிரப்ப வேண்டும்.

2. இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யும் போது விண்ணப்பதாரியினால் க.பொ.த (உயர் தர) பரீட்சையின் போது பயன்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பாவித்தல் வேண்டும்.

**இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பத்தை நிரப்பும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்:**

1. உரிய பரீட்சை இலக்கத்தை உள்ளிட்ட பின்னர், க.பொ.த (உயர் தர) பரீட்சைப் பெறு பேறுகள் மற்றும் க.பொ.த (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகள் தானாகவே தென்படும். எனினும் அந்தப் பெறுபேறுகளில் ஏதாவது முரண்பாடுகள் இருப்பின், பெறுபேறு மற்றும் பாடத்தை அந்த இடத்திலேயே சரிசெய்தல் வேண்டும்.

2. விண்ணப்பத்தை நிரப்பும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் அல்லது சந்தேகங்கள் எழுந்தால் அது தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மனிதவள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவினை வார நாட்களில் (அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த) காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை **0112693955** எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு அது தொடர்பான தெளிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.